சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
அசல் வழக்கு எண்.14/2016

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.D.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். (PW1) | நாள்: 24.10.2019 |
| த/பெ. | தொழில் |
| வயது. | |
| கிராமம்.நைனார்குப்பம் | வட்டம் |

**வா.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

09.08.1977ம் தேதியிட்ட கோவிந்தசாமி பிள்ளை முருகேசன் பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவண எண்.1534/1977(சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.1.** 21.08.1971ம் தேதியிட்ட பெருவூட்டான் என்பவா் முருகேசன் பெயருக்கு தாவா சொத்து சம்பந்தமாக எழுதிகொடுத்த கிரைய ஆவண எண்.1414/1971 (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.2.** 27.11.1970ம் தேதியிட்ட வேம்பிலிகவுண்டர் முருகேசன் பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவண எண்.1414/1971 (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.3**. 20.09.1961ம் தேதியிட்ட கோவிந்த பிள்ளை சாந்தம்மாள் பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவண எண்.2065/1971 (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.4.** 08.08.2007ம் தேதியிலான முருகேசன் இறப்பு சான்று (அசல்) **வா.சா.ஆ.5.** 14.03.2017ம் தேதியிலான முருகேசன் வாரிசு சான்று (அசல்) **வா.சா.ஆ.6.** தாவா சொத்து முருகேசன் கவுண்டர் பெயரில் உள்ளது என்பதற்கான கணினி பட்டா **வா.சா.ஆ.7**.தாவா சொத்து முருகேசன் கவுண்டர் பெயரில் உள்ளது என்பதற்கான வரி ரசீது **வா.சா.ஆ.8.** 2வது வாதி தேன்மொழி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற நிலையை காட்டுவதற்காக ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் வழங்கப்பட்ட சான்று **வா.சா.ஆ.9.** தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை.</u>**

ருக்மணியம்மாள் என்னுடைய தாயார். தேன் மொழி என்னுடைய அக்கா. 4முதல் 6 பிரதிவாதிகள் என் தங்கையின் குழந்தைகள் . தாவா சொத்து முருகேசன் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றும் ருக்மணியம்மாள் அவருக்கு சீதனமாக கிடைத்த நகைகளைக் கொண்டு வாங்கப்பட்டதாக ருக்மணியம்மாவால் சொல்லப்படும் கூற்று உண்மையா என்று கேட்டால் உண்மைதான். தாவா சொத்து முருகேச கவுண்டரின் சொத்து இல்லை என்பதும் தன்னுடைய சொத்து என்று ருக்மணியம்மாள் கூறுவது உண்மைதான். ஆனால் இவ்வழக்கில் நாங்கள் முருகேசன் பெயரில் உள்ள பத்திரங்களை தான் தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். மற்றவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தன்னுடைய சொத்து என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வழக்கு முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்ய கூடியது என்றால் சரியல்ல. தாவா பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. இராதாகிருஷ்ணன் என்னுடைய மூத்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கும் இராதாகிருஷ்ணனுக்கும் இடையில் எவ்வளவு வயது வித்தியாசம் என்று கேட்டால் 8 வயது இருக்கும். தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற போது இராதாகிருஷ்ணன் இருந்தாரா என்றால் இருந்தார். தாவா சொத்தை கிரையம் வாங்கிய போது இராதாகிருஷ்ணனின் வயது 20 இருக்குமா என்று கேட்டால் அது எனக்கு தெரியவில்லை. இராதாகிருஷ்ணனின் தற்போதைய வயது 60க்கு மேல் இருக்குமா என்றால் இருக்காது, இராதாகிருஷ்ணன் தான் என் வீட்டில் மூத்தவர் என்றால் சரிதான். என்னுடைய தந்தை வீட்டை கவனித்துக்கொள்ளமாட்டார் என்றும் குடிப்பார் என்றும் வீட்டை விட்டு சென்றுவிடுவார் என்று நான் சொல்லும் சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். பிரதிவாதி இராதாகிருஷ்ணனின் தொழில் விவசாயம் என்றால் சரிதான். தாவா சொத்தில் விவசாயம் செய்தார் என்றால் என் அம்மா விவசாயம் செய்தார். பிரதிவாதி ஏர் ஓட்டுவார் என்றால் என் அம்மாதான் ஆள் வைத்து விவசாயம் செய்தார். பிரதிவாதி விவசாய வேலை செய்வாரா என்றால் அவர் பொறுப்பாக எந்த வேலையும் செய்ய மாட்டார். என் அம்மாதான் எல்லா விவசாய வேலைகளையும் செய்வார். என்னுடைய பிராதில் பிரதிவாதி தாவா சொத்தை நாங்கள் அனுமதி வழங்கி அனுபவித்து இருப்பதாகவும் அதில் எங்களுக்கும் கூட்டு பங்கு

உள்ளது என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்றால் சரிதான். அதனால் பிரதிவாதி தாவா சொத்தில் விவசாயம் செய்து வருமானம் ஈட்டினார் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன் என்றால் சரிதான். விவசாய வருமானத்தை கொண்டு தான் எனக்கும் என் சகோதரிகளுக்கும் திருமணம் நடந்தது என்று சொன்னால் கடன் வாங்கி திருமணத்தை நடத்தினார்கள். கடனை பிரதிவாதி தான்அடைத்தார் என்று சொன்னால் வீட்டு மனையை விற்று கடனை அடைத்தார்கள். 2வது வாதி மூளைவளர்ச்சி இல்லாதவர் 2வது வாதியை பிரதிவாதிதான் கவனித்துக்கொள்கிறார் என்றால் சரியல்ல. என் அம்மாதான் கவனித்துக்கொள்கிறார். 1வது வாதியும் பிரதிவாதியும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்களா என்று கேட்டால் தற்போது தனித்தனியாக இருக்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்தபோதும் தனித்தனியாக இருந்தார்கள். வழக்கு தாக்கல் செய்த காலத்திற்கு 5வருடத்திற்கு முன்பிருந்து தனித்தனியாக இருக்கிறார்கள். மேற்படி 5வருட காலகட்டத்திற்கு முன்பு 1வது வாதியும் பிரதிவாதி மற்றும் அவருடைய மனைவி ஒன்றாகதான் இருந்தார்கள் என்றால் 15 வருட காலமாக தனித்தனியாக இருக்கிறார்கள். என்னுடைய அம்மா எந்த வீட்டில் குடியிருக்கிறார் என்று கேட்டால் என் அம்மா எங்கள் வீட்டில் குடியிருந்தர் தற்போது பிரதிவாதி அங்கு வந்து விட்டார் என் அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லை அவரை பார்த்துக்கொள்ள யாருமில்லை என்பதால் நான் அழைத்து சென்றேன். நான் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். பிரதிவாதி தற்போது தன் குடும்பத்துடன் அங்கு குடியிருக்கிறார் அந்த வீட்டில் 4 கடைகள் உள்ளது. அந்த கடைகளை பிரதிவாதி வாடகைக்கு விட்டிருக்கிறார் என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் அந்த கடையை தன் அம்மா வாடகை விட்டிருப்பதாக கூறுகிறார். யாருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் பெயர் ஞாபகமில்லை. கடைக்கான வாடகை உடன்படிக்கை யார் போட்டுள்ளார் என்று கேட்டால் என்னுடைய மகளின் பெயரில் உடன்படிக்கை போடப்பட்டுள்ளது. என்னுடைய மகளின் பெயரில் என் அம்மா வீட்டு மனை மற்றும் கடைகளை எழுதி வைத்துள்ளார். எழுதி வைத்த தேதி ஞாபகமில்லை. எங்களுடைய அம்மா அவருடைய வருமானத்தைக் கொண்டு என் தந்தையின் பெயரில் பெயரளவில் சொத்துக்களை வாங்கி அதனை தன்னுடைய சொத்து என்று சொல்லி தானாக முன்வந்து எங்கள் ஐவருக்கும் தலா ஒரு பங்கு என பிரித்து தருவதாக சொன்னதால் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். என்

அம்மா என் மகளின் பெயரில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் வீடு மற்றும் கடைகளில் பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகளின் பெயரில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் வீடு எப்பொழுது வாங்கப்பட்ட சொத்து என்று கேட்டால் என் அம்மா தன்னுடைய நகைகளை கொண்டு வாங்கிய சொத்தாகும். உண்மையில் மேற்படி வீடும் என் அம்மாவால் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் அதனையும் இந்த வழக்கில் சேர்த்திருப்பேன் என்று சொன்னால் மேற்படி சொத்து குறித்து தனியாக வழக்கு உள்ளது. அசல் வழக்கு எண் 340/2015 என்ற வழக்கைதான் சொல்கிறேன் என்றால் சரிதான். அது பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் மகளின் பெயரில் பொய்யாக ஆவணத்தை எழுதி வைத்ததால் அதனை ரத்து செய்வதற்காகதான் வழக்கை தாக்கல்செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை பிரதிவாதி தாக்கல் செய்ததால் அவரை மிரட்டுவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரனம் 2 ,3/4 ஏக்கர். தாவா சொத்து என் தாயாரின் சொத்து என்று சொல்லிவிட்டு பின்னர் முருகேசன்இ றந்து விட்டதால் அவரின் வாரிசுகள் அடிப்படையில் பாகம் கேடக்ப்பட்டது எங்களுடைய பிராதில் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்களின் அடிப்படையில் ஏற்புடையது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு தொழில் விவசாயம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் வாங்கியபோது நான் பிறந்திருந்தேன்.நான் 1965ம் வருடம் பிறந்தேன். தாவா சொத்துக்கள் எப்படி கிரையம் வாங்கப்பட்டது என்பத எனக்கு தெரியாத என்றால் 3வதாக சொத்து வாங்கிய போது எனக்கு தெரியும். 3வது சொத்து கோவிந்தபிள்ளை என்பவரிடமிருந்து வாங்கினார்கள், என் அப்பாதான் சொத்து வாங்கினார் என் அம்மாவின் நகைகளை விற்று வாங்கினார். என் அம்மாவின் நகையை விற்று சொத்து வாங்கியதாக சொல்வதும் தாவா சொத்து என் அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என் அப்பா உடல் நிலை சரியல்லாமல் இருந்தார். என் அப்பா 08.08.2007ம் தேதி இறந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும் வரை அவருக்கான வேலையை அவர்செய்துகொண்டார் என்றால் சரிதான். அவர் நல்ல நடமாட்டத்துடன் இருந்தார் என்றால் இறப்பதற்கு 3 மாதத்திற்கு முன்பிருந்து படுத்த படுக்கையாக இருந்தார். என் அப்பாவிற்கு காசநோய் . அதற்கான மருத்துவ ஆவணம் உள்ளதா என்றால் என் அம்மாவிடம்

தான் கேட்க வேண்டும் .2005ம் வருடம் நல்லமுறையில் இருந்தார். 03.10.2005ம் தேதி பிரதிவாதிக்கு என் தந்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பினாமி சட்டபடி என்னுடைய அம்மா நகைகளை விற்று என்னுடைய அப்பாவின் பெயரில் பெயரளவில் சொத்துக்களை வாங்கியிருந்தாலும் அது என்னுடைய அம்மாவின் சொத்து என்று சொல்லமுடியும் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா உயிருடன் இருந்த போது என் அப்பா மற்றும் பிரதிவாதி நல்ல முறையில் இருந்து சம்பாதித்து சொத்துக்களை வாங்கி எங்களுக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. எங்குடைய பிராதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின் படி எங்களுடைய வழக்கு ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை தற்போது பிரதிவாதி பயிர் செய்து வருகிறார். தாவா சொத்து பிரதிவாதியின் தனிப்பட்ட முன்சொத்து என்றும் அதில் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றும் கூடுதல் செலவுத்தொகையுடன் என்னுடைய ஆவணங்களின் படி தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய அம்மாதான் இவ்வழக்கில் தகுந்த சாட்சி என்றும் உண்மையை மறைப்பதற்காக அவரை விசாரிப்பதில் இருந்து தவிர்த்து விட்டோம் என்று சொன்னால் அவர் நடக்க முடியாமல் இருப்பதால் வரவில்லை.